19th July 1962] [திரு. சா. கணேசன்]

கொண்டிருந்தோம். இப்போது வளம் போய்விட்டது. வசதி பெற வெண்டுமென்பதற்காகத்தான் இதைச் செய்ய வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

1955-லே புயல் வந்தபோது, தஞ்சை, புதுக்கோட்டை, ராமநாதபுரம் ஆகிய இந்த மூன்று பகுதிகளும் சேருகின்ற ஒரு பகுதி இருக்கிறது. அந்தப் பகுதியிலே உள்ள ரோடுகள் எல்லாம் சரிந்து போய்விட்டது. அந்தப் பகுதி கனம் ராமையா அவர்களுக்கு நன்கு தெரியும். இப்படி மூன்று பகுதிகளும் சேருகின்ற இடத்திற்கு சாக்கோட்டைப்பகுதி என்று சொல்லப்படும். அந்தப் பகுதியில் மித்திராவயல் ரோடு தரைமட்டமாகப் போய்விட்டது. அந்தப் பகுதியெல்லாம் வெள்ளக் காடாகி விட்டது. அதுசமயம் கனம் முதல் அமைச்சர் அவர்கள்கூட வந்திருந்தார்கள். 6, 7 நாட்கள் சென்ற பிறகும் நிலைமை சீரடையாமையால் அங்கு போக முடியாமையால், திரும்பி விட்டார்கள். மித்திராவயல் என்ற அந்தப் பகுதியிலே எல்லாம் வெள்ளம் பெருஞ்சேதம் விளைவித்துள்ளது. அந்தப் பகுதியிலே உள்ளவர்கள் எல்லாம் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். 7 ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்னும் அந்தப் பகுதி கவனிக்கப்படாமல் இருக்கிறது. அரசாங்கத்தார் எத்தனையோ இடங்களுக்கு நேரடியாகச் சென்று நிவாரண வேலைகளைச் செய்கின்றார்கள். அதைப்போல் இந்தப் பகுதிக்கும் வந்து நிவாரண வேலை போலக்கருதி ரோடு போடுவதை முதலில் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை மறக்க மாட்டார்கள் என்றும் நம்புகிறேன். இதையெல்லாம் மனத்திலே கொள்ள வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். இந்த நிலையிலே காரியங்களை சமூகமாக அணுகி, செம்மையாக காரியங்கள் நடப்பதற்கு நீங்கள் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற நோக்கத்திலேதான் நான் இதன்மீது வெட்டுப் பிரேரணை கொண்டு வருகிறேன். ஆகவே, இவைகளையெல்லாம் ஏற்றுக் கொண்டு, காரியங்களை செம்மையாக நடத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதை இங்கு மட்டும் செய்யவேண்டுமென்று நான் சொல்லவில்லை; எல்லா இடங்களுக்கும்தான். ஆகவே, இந்த எல்லா விஷயங்களையும் கவனத்தில் கொண்டு, எந்தக் காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்பதற்கு ஒரு பட்டியல் தயார் செய்துகொண்டு, அந்த முறையிலே உணர்ச்சியும், உற்சாகமும், இளமைத் துடிப்பும் நிரம்பிய நமது கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் காரியங்களைச் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

V.—PICKETING BY THE DRAVIDA MUNNETRA KAZHAGAM.

*திரு. டி. பி. ஏழுமலை: கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய சட்டசபை மெம்பர்கள் சிலர் இன்றைக்கு மறியலில் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டது. அவர்கள் மறியல் செய்கின்ற இடங்களில் எல்லாம், பெரிய குழப்பமும், கலகமும் ஏற்பட்டிருப்பதாகவும், அதனால் பஸ் போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்பட்டு பல இடங்களிலே என்னைப் போன்ற பஸ்ஸில்

பிரயாணம் செய்யக்கூடியவர்கள் பஸ்ஸில் போகக்கூடாத ஒரு நிலைமை ஏற்பட்டிருப்பதாகவும், வெளியே போவதற்குக்கூட அஞ்சக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டிருப்பதாகவும் வெளியே இருந்து வந்த நண்பர்கள் சிலர் சொல்லுகிறார்கள். ஆகவே, அரசாங்கத்தை உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். பஸ்ஸை உபயோகிப்பவர்களுக்கும், மற்றும் பஸ் போக்குவரத்திற்கும் இடைஞ்சல் ஏற்படாத முறையிலே பாதுகாப்புக் கொடுப்பதற்கு இந்தச் சர்க்கார் முயற்சி எடுக்குமா என்பதைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, சிலர் நகரத்திலே பலாத்காரத்திலே இறங்கி இருக்கின்றார்கள் என்கின்ற செய்தி எனக்கும் கிடைத்திருக்கின்றது. அரசாங்க பஸ்கள்கூட பாழ்படுத்தப்பட்டு இருக்கின்றன. ஆனால், போலீசார் இதைப்பற்றிக் கண்காணித்துக் கொண்டு வருகின்றார்கள். ஆகவே, பீதி ஏற்பட வேண்டிய அவசியம் இல்லை. எவ்வித பீதியோ, இடைஞ்சலோ கிடையாது என்றும் நான் சொல்வேன். நாளைக்குக் கேள்வி நேரத்திற்குப் பின் இந்த நிலைமைகளையெல்லாம் விளக்கி ஒரு ஸ்டேட்மெண்டு நான் சமர்ப்பிக்கிறேன். ஆனால், இப்போது அனாவசியமான பீதியை ஏற்படுத்தி, இன்னும் அதை அதிகப்படுத்துவதில் யாரும் ஈடுபட வேண்டாம். போலீசார் இதிலே சரியான கவனம் செலுத்தி நிலைமையைச் சமாளித்து வருகின்றனர் ; அடக்கி வருகின்றனர். மக்களுக்கு வேண்டிய பாதுகாப்பை அளிப்பதிலே, நகரத்திலே ஆங்காங்கு போலீசாரைப் போட்டு, கவனம் செலுத்திக்கொண்டு வருகின்றார்கள் என்பதைச் சொல்லிக் கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

திரு. க. ர. நல்லசிவம் : அதாவது, சென்னையிலே வட சென்னை, அண்ணாமலை மன்றம் போன்ற பகுதிகளிலே நடைபாதையிலே சென்ற பொது ஜனங்களைக்கூட போலீஸார் அடக்குமுறையைக் கையாண்டு தாக்கியிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. இதைப் பற்றி இந்த அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : லா காலேஜ் அருகில் கல் எறியப்பட்டு 40 பஸ்கள் டேமேஜ் ஆனபோது, போலீசார் நடவடிக்கை எடுக்க நேர்ந்திருக்கிறது. அப்போது பஸ் பிரயாணிகளுக்கும் காயமேற்பட்டிருக்கிறது. இதனால் சாதாரண ஜனங்களைக்கூட போலீசார் விரட்டி அடித்தார்கள் என்று சொல்வதா ? ஆனால், அதை இப்படிச் சொல்லுவது திரு. நல்லசிவம் அவர்கள் பாணி. இதெல்லாம் எங்களுக்கும் தெரியும். இதைப் பற்றியெல்லாம் நான் நாளைக்கு விரிவாகச் சொல்கிறேன்.

திரு. சா. கணேசன் : தலைவர் அவர்களே, இப்படிப் பாதையிலே சென்றவர்கள் பீதி அடைவதற்கு உரிய செயல்முறைகள் என்ன அங்கு நடந்தன என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் விளக்கு வாரா ?

கனம் சபாநாயகர் : நாளைக்கு கனம் அமைச்சர் அவர்கள் விளக்கமாக ஒரு ஸ்டேட்மெண்டு கொடுப்பார்.

19th July 1962]

கனம் திரு. எம் பக்தவத்சலம்: பீதி மட்டுமல்ல. லா காலேஜ் அருகில் கல்லெடுத்து அடித்ததால், மக்கள் மீது டியர் காஸ் வேறு பிரயோகிக்க வேண்டி நேர்ந்தது. 40 பஸ்கள் பாழாக்கப்பட்டு இருக்கின்றன. ஆகவே எந்தவிதமான நிகழ்ச்சிகள் நடை பெற்றன என்பதற்கெல்லாம் நாளைக்கு விளக்கமாகப் பதில் சொல் கிறேன்.

IV.—VOTING ON DEMANDS FOR GRANTS 1962–63—*cont.*

DEMAND XXIX—PUBLIC WORKS—GRANT IS IN-AID—*cont.*

* **கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** கனம் சபாநாயகர் அவர்களே, பெருமை பொருந்திய அங்கத்தினர்களே, நகராட்சிகள், பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள், சென்னை மாநகராட்சி மன்றம், மாநில வீட்டு வசதி சபை ஆகியவற்றிற்கு உதவி மானியங்கள் வழங்குவதற்காக இந்தத் தொகையை ஒதுக்கி, இந்த மானியத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இதன்மீது அன்பர்கள் இன்றைக்கு, சாதாரணமாக இருப்பதுபோல் இல்லாமல், ஒரு அமைதியான சூழ்நிலையில் தங்கள் தங்கள் கருத்துக்களை எல்லாம் எடுத்து வழங்கியிருக்கிறார்கள். அதற்கு நான் உங்களுக்கெல்லாம் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய அங்கத்தினர் அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சென்னை நகராட்சிக்கு சர்க்கார் ஏராளமான பணத்தைக் கடனாகவும், மானியமாகவும் அளித்திருக்கிறது என்றும், ஆனால் ஒரு குறிப்பிட்ட பூந்தமல்லி ஹைரோடு, மவுண்ட் ரோடு போன்ற சாலைகளில் மட்டும்தான் வேலைகள் நடந்து கொண்டிருக்கிறது என்றும் குறை கூறினார்கள். ஆனால் நிலைமை அவ்வாறு இல்லை என்று சொல்லிக்கொள்ளுகிறேன். 1960-61-லேயும், 1961-62-லேயும் அதிகமான அளவிலே அவர்களுக்கு, கார்ப்பரேஷனுக்கு, பணம் ஒதுக்கப்பட்டாலும், இந்த இரண்டு ரோடுகள் நீங்கலாக அவர்கள் சென்னை நகரில் 49, 50 பஸ் ரூட்டுகள் வழங்குவதற்கான பல சாலைகளையும், ரோடு சீர்திருத்த திட்டத்தில் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதைப்போல் பல ஓவர் பிரிட்ஜுகள், அதாவது சின்ன பாலங்கள் கட்டப்படுவதற்கும், இன்னும் பல திட்டங்களுக்கும் இந்த பணத்திலே உள்ளிட்டு, நல்ல வேலைகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஸ்லம்கள் சம்பந்தப்பட்ட வரையிலும், சேரிகள் ஒழிப்பு, சேரிகள் விஸ்தரிப்பு திட்டம் என்ற தலைப்பில் ஏற்கனவே 144 லட்சம் ரூபாய் சாங்ஷன் செய்யப்பட்டு, கிட்டத்தட்ட 2,895 திறந்த வெளி மனைக்கட்டுகளும், 238 வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன. இதிலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ஆனால், வட சென்னைக்கும் இந்தச் சலுகை கிடைக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். திரு. சா. கணேசன் அவர்கள் காரைக்குடி ஸ்டேடியம் பற்றி குறிப்பிட்டார்கள். அது விஷயமாக முனிசிபல் கமிஷனரிடமிருந்து எந்தவிதமான 'ப்ரபோஸலும்' சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை என்று நான் தெரிவித்துக்